**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**முன்னிலை : திருமதி.எ..சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

***அசல் வழக்கு 40/2018 ல் இடைமனு எண் . 242/2025***

1, ராமசாமி

2, ஆறுமுகம் ,..... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கிருஷ்ணமூர்த்தி

2. ஆறுமுகம்

3. ஊரக வளர்ச்சி அலுவலர்

பரங்கிபேட்டை

4. பாலகிருஷ்ணன் ...... எதிர்மனுதாராகள்/ பிரதிவாதிகள்

மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனு என் முன்னர் கடந்த 2.2.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருகே.ராமதாஸ், அவர்கள் முன்னிலையாகியும் 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி,மகேஷ் அவர்கள் முன்னிலையாகியும் 3,4 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும் இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும் இதுநாள்வரை என்னுடைய பிரசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,,,,,,,,,

உத்தரவு

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் 8 விதி 9 ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ள தாக்கல் செய்த மனு.

2. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்-</u>

இம்மனுவின் 1ம் மனுதாரர் 2ம் மனுதாரர் சார்பாகவும் இம்மனுவை தாக்கல்

செய்வதாகவும் அசல் வழக்கில் மனுதாரர்கள் வாதிகள் என்றும் எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் என்றும் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனத்திற்கு தாவா தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்களும் வழக்கறிஞர் வைத்து எதிர்வழக்குரையை தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும் இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சில பொய்யான விவரங்கள் சொல்லப்பட்டு உள்ளதாகவும் அதனை தற்போது இத்துடன் தாக்கல் செய்யப்ப்டும் பதில் எதிர்வழக்குரையில் உண்மையான விவரங்கள் சொல்லி தாக்கல் செய்யப்படும் பதில் எதிர்வழக்குரையை ஏற்றால்தான் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சிகள் ஏற்படும் என்றும் எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ள மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்-

மனுதாரர்கள் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரர்களையே சாரும் என்றும் அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட்டு அளவீடுகள் மேற்கொண்டு அதில் மனுதாரர் எதிர்மனுதாரரின் இடத்தில் சிறு பகுதியினை ஆக்கிரமிப்பு செய்தும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சொந்தமான சிறு பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து இருப்பதாக தெரிய வந்ததாகவும், இந்த மனுதாரர்கள் தற்போது இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது மனுதாரர்களுக்கு வழக்கில் கூடிவரக்கூடிய கட்சிகள் இல்லாத காரணத்தினால் வழக்கை மேன்மேலும் காலதாமதப்படுத்து வேண்டும் என்றும் இந்த எதிர்மனுதாரர்களை அலைகழிக்க செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தில் தற்போது பொய்யான சங்கதிகளுடன் பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4, இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதேயாகும்.

6. மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனத்திற்கு தாவா தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்களும் எதிர்வழக்குரையை தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும் இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சில பொய்யான விவரங்கள் சொல்லப்பட்டு உள்ளதாகவும் உண்மையான விவரங்கள் சொல்லி தாக்கல் செய்யப்படும் பதில் எதிர்வழக்குரையை ஏற்றால்தான் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சிகள் ஏற்படும் என்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ள மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை செய்தாலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர்கள் தரப்பில் சில அம்சங்களை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிப்பது அவசியமான ஒன்று என்றும் பதில் எதிர்வழக்குரையில் கூறப்பட்ட சங்கதிகள் உண்மையானதா? இல்லையா? என்பதை அசல் வழக்கின் விசாரணை முடிவில் தெரியவரும். இம்மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதிப்பேதும் இல்லை. அசல் வழக்கில் விசாரணை ஆரம்பிக்காத நிலையில் இம்மனு தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவினை அனுமதித்து நடத்துவதுதான் நீதிக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது,

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு செலவுக்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- E.Swetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்